# DAC
# மதிப்பாய்வு நியதிகள்

## பொருத்தப்பாடு

*(Relevance)*

பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் பிரஜைகளுக்கான அதி செயற்திறன் மிக்க உறுப்பினராக இருப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ளீர்களா?

பாராளுமன்ற விவாதங்களின்போது உங்களது தொகுதியை பிரதிநிதித்துவம் செய்து சரியான கேள்விகளை எழுப்புவதன் ஊடாக நாட்டின் அபிவிருத்தியை உச்சமடையச் செய்வதற்கு ஆர்வங் கொண்டுள்ளீர்களா?

அப்படியாயின் பொருளாதார ஒத்துழைப்புக்கான அபிவிருத்தி நிறுவனம்/அபிவிருத்தி உதவிக்கான குழு (OECD/DAC) ஏற்றுக்கொண்ட மதிப்பாய்வு நியதிகள் அடங்கிய இந்த கையேட்டுத் தொடரினை வாசிப்பது பிரயோசனமாகும்.

**மதிப்பாய்வுக்கான ஆசிய பசுபிக் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமையம்**

## அறிமுகம்

பாராளுமன்றத்தின் ஊடாக பொறுப்புக்கூறல், வெளிப்படைத் தன்மையை ஊக்குவித்தல் மற்றும் உரிமைகளை பாதுகாத்தல் என்பன ஜனநாயகத்தின் மூலக்கற்களாகும். கொள்கை வகுப்பாளர்கள் என்ற வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையில் முக்கிய பங்காளர்களாவர். பாராளுமன்ற விவாதங்களில் சரியான கேள்விகளை மதிப்பாய்வு ஆதாரங்கள் ஊடாக முன்வைப்பதன் மூலமும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அபிவிருத்திச் செயன்முறைகளுக்கு வள ஒதுக்கீடுகளைச் செய்யக்கோருவதன் மூலமும் நிலைபேறான அபிவிருத்தி சட்டகத்துக்கு அமைவாக அபிவிருத்தி செயன்முறையை கனதியாக்கலாம்.

அபிவிருத்தி இடையீடுகள் (Intervention) தொடர்பிலான தெளிவான புரிதலுடன் பாராளுமன்ற விவாதாங்களில் சரியான கேள்விகளை முன்வைப்பதன் மூலம் பிரஜைகளுக்கான உச்சப்பயன் கிடைப்பதை உறுதி செய்யலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதங்களின்போது சரியான கேள்விகளை மதிப்பாய்வு ஆதாரங்கள் ஊடாக முன்வைப்பதற்கு அவசியமான அடிப்படைகளை OECD/ DAC மதிப்பாய்வு நியதிகள் வழங்குகின்றன. இந்த கையேடானது OECD/ DAC ஏற்றுக்கொண்ட மதிப்பாய்வு நியதிகள் ஆறினையும் (6) தெளிவாக விளக்குகிறது.

## OECD / DAC மதிப்பாய்வு நியதிகள்:

பொருத்தப்பாடு (Relevance), இணக்கப்பாடு (Coherence), செயற்திறன் (Effectiveness), வினைத்திறன் (Efficiency) தாக்கம் (Impact), நிலைபேறானதன்மை (Sustainability) ஆகியன OECD / DAC ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பாய்வு நியதிகளாக உள்ளன. இந்த நியதிகள் மதிப்பாய்வுக்காக உருவாக்கப்பட்டன ஆயினும் எந்தவொரு அபிவிருத்தி இடையீடு குறித்தோ, கொள்கை குறித்தோ அல்லது நிகழ்ச்சித் திட்டம் குறித்தோ வலுவான கேள்விகளை முன்வைப்பதற்கும் பயன்படுத்தப்பட முடியும். ஆகவே OECD /DAC மதிப்பாய்வு நியதிகளானவை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானம் எடுத்தலுக்கும், கொள்கை உருவாக்கத்துக்கும் முக்கியமானவையாகும்.

## பொருத்தப்பாடு

இடையீடானது எந்தளவு தூரம் மிகச் சரியாக இடம்பெற்றுள்ளது என்பதனை அளவிடப் பொருத்தமான நியதியாக OECD / DAC 'பொருத்தப்பாட்டினை' வரைவிலக்கணம் செய்கிறது.

இடையீட்டின் நோக்கமும் வடிவமைப்பும் பயனாளிகளின் எத்தகைய எதிர்பார்ப்பை பூர்த்தி செய்கிறது. பூகோள ரீதியாகவும், நாட்டினதும், பங்காளர்களினதும், நிறுவனங்களதும் தேவைகள், கொள்கைகள், முன்னுரிமைகள் போன்றன இதில் செல்வாக்குச் செலுத்தக்கூடியது. (இடையீடு இடம்பெறும் பொருளாதாரம், சுற்றாடல், ஒப்புரவு, சமூகம், அரசியல் பொருளாதாரம், கொள்திறன் நிபந்தனைகள் இதில் உள்ளடங்கும்)

## முக்கிய விதிமுறைகள்

**பதிற்குறி:** இடையீட்டின் நோக்கமும் வடிவமைப்பும் பொருளாதாரம், சுற்றாடல், ஒப்புரவு, சமூகம், அரசியல் பொருளாதாரம், கொள்திறன் நிபந்தனைகளின் அடிப்படையில் எந்தளவு தூரத்துக்கு பதிலிறுத்துவதாக உள்ளது.

**பயனாளிகள்:** அபிவிருத்தி இடையீடானது நேரடியாகவோ, மறைமுகமாகவோ தனிப்பட்டவர்களாக அல்லது குழுக்களாக யாரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுகிறது என்பதையே 'பயனாளிகள்' என்பது குறித்து நிற்கிறது. மறுவடிவில் கூறினால் உரிமைகளை வேண்டி நிற்பவர்கள் அல்லது பாதிக்கப்பட்ட மக்களை அது சென்றடைகின்றதா என்பதை குறித்து நிற்கிறது.

**பங்குதாரர்/நிறுவனங்கள்:** அரசாங்கம் (தேசிய, மாகாண, உள்ளூராட்சி), சிவில் சமூக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், சர்வதேச முகவர் நிறுவனங்கள் முதலானவை நிதியீட்டம் செய்யும், நடைமுறைப்படுத்தும், மேற்பார்வை செய்யும் யாவருமே அபிவிருத்தி இடையீட்டின் பங்காளர்கள் ஆவர். பொருத்தப்பாட்டு அளவீடானது வேறுபட்ட விதங்களில் முன்னுரிமைகளையும் தேவைகளையும் பிரித்தறியும். அபிவிருத்தி இடையீடானது இணைத்துக் கொள்ளப்பட வேண்டியவையா? தக்கவைக்கப்பட வேண்டியவையா? என்பதை அளவீடு செய்வதாக பொருத்தப்பாட்டு நியதி நோக்கும்.

## மதிப்பாய்வின் பொருத்தப்பாடு (Relevance) நியதியை பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு பயன்படுத்தலாம்?

பொது மக்களுக்கான அபிவிருத்தி இடையீடுகள் பாராளுமனறத்திலேயே தீர்மானிக்கப்படுகின்றன. அவை பிரஜைகளுக்கு பொருத்தப்பாடு உடையதானதாக உள்ளதா என்பதை உறுதி செய்யும் பொறுப்பும் பாராளுமன்றத்துக்கானதாகும். செயல்திறன் மிக்க பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், தான் பிரதிநிதித்துவம் செய்யும் தொகுதி மக்களின் உண்மையான தேவையை குறித்த அபிவிருத்தி இடையீடு நிறைவு செய்யவல்லதா? என்பது குறித்து கேள்வி எழுப்ப பொருத்தப்பாட்டு நியதி வாய்ப்பளிககிறது. உண்மையிலேயே அபிவிருத்தி இடையீடுகள் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு முன்னர் அவை பொருத்தப்பாட்டு நியதியை கொண்டுள்ளதா எனபதை உறுதி செய்யும் பொறுப்பு பாராளுமன்றத்துக்கு உரியது. யதார்த்தத்தில் பெரும்பாலான கொள்கைகளும் திட்டங்களும் தெளிவான ஆரம்பத்தையோ முடிவையோ கொண்டிருக்கவில்லையெனில் பொருத்தப்பாட்டு நியதி அடிப்படையிலாக எழும் கேள்விகளானது அபிவிருத்தி இடையீடு நடைமுறைப்படுத்தப்படும்போது அவை பிரஜைகளுககு அவசியமான விதத்தில் இடம்பெறுவதை கண்காணித்து விருத்தி செய்ய வேண்டிய இடங்களையும் அடையாளம் காண உதவுகிறது.

- உண்மையிலேயே பிரஜைகளின் தேவையின் அடிப்படையில் இடையீடு இடம்பெறுகிறதா?
- சரியான பயனாளிகள் அடையாளங் காணப்பட்டு உள்ளீர்க்கப்பட்டனரா?
- சரியான பங்காளர்கள் அடையாளங் காணப்பட்டு கலந்தாலோசிக்கப்பட்டனரா?
- அரசாங்கத்தினாலும் ஏனைய பங்காளர்களினாலும் முன்னுரிமை அடிப்படையில் அடையாளங் காணப்பட்ட பிரச்சினைகைள குறித்த அபிவிருத்தி இடையீடு தீர்வுகாண எத்தனிக்கிறதா?
- புறச்சூழல் மாறும் போது கொள்கைகளும் அபிவிருத்தி இடையீடுகளும் மாற்றமடையக்கூடிய நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டிருககின்றனவா?

## பொருத்தப்பாட்டினை (Relevance) உறுதி செய்யும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக்கூடிய கேள்விகள்

பொருத்தப்பாட்டினை (Relevance) உறுதி செய்யும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக்கூடிய கேள்விகள்

பொதுமக்களுக்கான அபிவிருத்தி நோக்கிய இடையீடுகள், கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் பொருத்தப்பாட்டுத் தன்மை கொண்டதாக, பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பக் கூடியதான கேள்விகளாக பின்வருவனவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

**அ:** அபிவிருத்தி இடையீடாக கொள்கை/ நிகழ்ச்சித்திட்டம்/ அபிவிருத்தித் திட்டம் பொருத்தமான பயனாளிகளுக்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதா?

**ஆ:** நிகழ்ச்சித் திட்டத்தை தீர்மானிப்பதற்கு எத்தகைய ஆதாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது?

**இ:** கொள்கை அல்லது நிகழ்ச்சித் திட்டம் வடிவமைப்பின்போது பயனாளிகளுடன் கலந்தாலோசனை செய்யப்பட்டுள்ளதா?

**ஈ:** அரசாங்க உதவி வழங்கலின்போது பிரஜைகளுக்கு மத்தியில் சரியாக பயனாளிகள் குழுவை தெரிவு செய்வதில் முன்னுரிமை அளிக்கப்பட்டதா?

**உ:** கொள்கை/ நிகழ்ச்சித்திட்டம்/ அபிவிருத்தித் திட்டமிடல்கள் எவ்வாறு தேசிய முன்னுரிமையுடன் இணங்கி செல்கின்றன?

**ஊ:** கொள்கை/ நிகழ்ச்சித்திட்டம்/ அபிவிருத்தித் திட்டமிடல்கள் எவ்வாறு நிலை பேறான அபிவிருத்தி இலக்குகளுடன் இணைந்து செல்கின்றன?

**எ:** சமூகப் பொருளாதார சுற்றாடல் பின்னணிகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கக் கூடிய வகையில் அபிவிருத்தி இடையீடுகள் எந்தளவுக்கு நெகிழ்ச்சி தன்மை கொண்டுள்ளன?

**ஏ:** கொள்கை/ நிகழ்ச்சித்திட்டம்/ அபிவிருத்தித் திட்டமிடல்கள் எவ்வாறு பயனாளிகளின் வாழ்க்கைக் காலத்துக்கு பொருத்தப்பாடுடையதாக உள்ளன?

## பொருத்தப்பாடு (Relevance) தொடர்பிலான வேறு வள மூலங்கள்


OECD evaluation criteria, retrieved from *https://tinyurl.com/2p9835a6*

OECD(2022). Understanding the six criteria: Definitions, elements for analysis and key challenges. retrieved from *https://tinyurl.com/bddeffx8*



**வெளியீடு**

ASIA PACIFIC PARLIAMENTARIANS FORUM FOR EVALUATION

APEA Asia-Pacific Evaluation Association

Global Parliamentarians Forum for Evaluation



தொடர்புகளுக்கு: apea.coordinator@gmail.com



**தமிழாக்கத்திற்கான அனுசரணை**

SLEvA Sri Lanka Evaluation Association



தொடர்புகளுக்கு: sleva.sec@gmail.com